## 73வது பிறந்தநாளில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - குடியரசுத் தலைவர் - பிரதமர் வாழ்த்து!

## வாழ்த்துக் கூறிய அனைவருக்கும் – முதல்வர் நெஞ்சார்ந்த நன்றி!

*சென்னை, மார்ச் 3 -*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை யொட்டி நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், சமூகவலைதளங்கள் வாயிலாகவும், கடிதங்கள் மூலமாக வும் பிறந்தநாள் வாழ்த்துகள் தெரி வித்த முக்கியப் பிரமுகர்களின் விவ ரங்கள் வருமாறு:-**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி அவர் கள் தொலைபேசி வாயிலாகவும், எக்ஸ் வலைதளம் வாயிலாகவும் முத லமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள், மத்திய வேளாண்மை மற்றும் விவசா யிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் எக்ஸ் வலைதளம் வாயிலாக பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு எக்ஸ் வலைதளம் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி யின் முன்னாள் தலைவரும், மக்க ளவை எதிர்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு எக்ஸ் வலைதளம் வாயி லாக பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித் தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி யின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், ஆகியோர் தொலை பேசி வாயிலாக முதலமைச்சர் அவர் களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரி வித்தனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு 'எக்ஸ்' வலைதளம் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநர் குலாம் சந்த் கட்டாரியா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களுக்கு 'எக்ஸ்' வலைதளம் வாயிலாக கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜ யன் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

எக்ஸ் வலைதளம் மூலமாக ஆந்தி ரப் பிரதேசத்தின் முதலமைச்சர் என். சந்திரபாபு நாயுடு, ஆந்திரப் பிரதேசத் தின் முன்னாள் முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி, உத்தரப் பிரதேசத் தின் முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அகி லேஷ் யாதவ், பாட்டாளி மக்கள் கட் சியின் தலைவர் டாக்டர் அன்புமணி இராமதாஸ், பாரதிய ஜனதா கட்சி யின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இங்கிலாந்து ஏம்ஸ்பரி நகரத்தின் மேயர் டாக்டர் மோனிகா தேவேந் திரன் அவர்கள் எக்ஸ் வலைதளம் மூலமாக பிறந்தநாள் வாழ்த்து தெரி வித்தார்.

கவிஞர் வைரமுத்து அவர்கள் எக்ஸ் வலைதளம் மூலமாகவும், நேரி லும் முதலமைச்சர் அவர்களுக்கு பிறந் தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவ ரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான கமல்ஹாசன், தேசிய முற் போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேம லதா விஜயகாந்த் ஆகியோர் எக்ஸ் வலைதளம் மூலமாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர் கள் முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்து தெரி வித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் எக்ஸ் வலைதளம் மூல மாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவித் தார்.

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் எக்ஸ் வலைதளம் மூலமாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

**முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரி வித்தவர்கள்**

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத் துறை அமைச் சர் துரைமுருகன், துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு உள் ளிட்ட அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு, திருமதி கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் முத லமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சட்ட மன்ற உறுப்பினர்கள்;

**கூட்டணி கட்சித் தலைவர்கள்**

திராவிடர் கழகத் தலைவர் கி. வீர மணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, முன்னாள் தலைவர் தங்கபாலு, மதி முக பொதுச் செயலாளர் நாடாளு மன்ற உறுப்பினர் வைகோ, நாடாளு மன்ற உறுப்பினர் துரை வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், முன்னாள் மாநில செயலாளர் ஜி.ராம கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட் சியின் மாநில செயலாளர் மு. வீர பாண்டியன், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணை செயலாளர்கள் ரவி, பெரியசாமி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் பாபு, எஸ்.எஸ். பாலாஜி, துணைப்பொதுச் செயலா ளர் வன்னியரசு, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹி ருல்லா, சட்டமன்ற உறுப்பினர் அப் துல்சமது, மாநில அமைப்புச் செயலா ளர் ஷேக், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலா ளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவனத் தலைவர் தனியரசு, தமிழக வாழ்வு ரிமை கட்சித் தலைவர் தி.வேல்முரு கன், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொருளாளர் எல். கே.சுதீஷ், துணை பொதுச் செயலா ளர்கள் சந்திரன் மற்றும் பன்னீர்செல் வம்;

திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், கிறிஸ் தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமீமுன் அன்சாரி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ், ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான், ஆதித்தமிழர் கட்சியின் மாநிலத் தலைவர் கு. ஜக்கையன், ஆம் ஆத்மி கட்சியின் மாநிலத் தலைவர் வசீக ரன், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், இந் திய தேசிய லீக் தலைவர் பஷீர் அக மது, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரம ராஜா, ஈரோடு புதிய திராவிடர் கழ கத் தலைவர் கே.எஸ்.ராஜ்குமார், வீர முத்தரையர் முன்னேற்றக் கழகத் தலைவர் கே.கே. செல்வக்குமார், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தின் முன்னாள் தலைவர் மற்றும் சட் டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். பீட்டர் அல்போன்ஸ், Social Democratic Party of India (SDPI) கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், மாநில பொதுச் செயலாளர்கள் ஏ.கே.கரீம், அபுபக்கர் சித்திக், தலைமை நிலைய செயலாளர் முகமது ரஷீத், சென்னை மேற்கு மாவட்ட தலைவர் செய்யது அகமது, சேப்பாக்கம் தொகுதி தலை வர் ஜெய்னுலாப்தீன் மற்றும் நிருவா கிகள், திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சத்யா;

தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்ப னார்) கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் கடிதம் மூலம் முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்பு றக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். வி.சேகர், திருமதி திவ்யா சத்யராஜ்;

இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், திரைப்பட இயக்குநர் மாரி செல்வராஜ்;

தலைமைச் செயலாளர் நா.முரு கானந்தம், கூடுதல் தலைமைச் செய லாளர்கள், முதன்மைச் செயலாளர் கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவ லர்கள் மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள்;

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி. நாராயணசாமி;

டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், நல்லி குப்புசாமி, விஜிபி குழுமத்தின் தலைவர் டாக் டர் வி.ஜி.சந்தோசம், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத் தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா, டாக்டர் மோகன் காமேஸ்வரன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் ஜோ. அருண்;

முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, (ஓய்வு), காவல்துறை முன்னாள் தலைமை இயக்குநர் சைலேந்திர பாபு (ஓய்வு);

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆர்.தங்கம் மற்றும் சங்க நிர்வாகிள், தமிழ்நாடு அரசின் மாற் றுத்திறனாளிகளுக்கான ஆலோச னைக் குழுவின் உறுப்பினரும், டிசம் பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவரு மான பேராசிரியர் தீபக் நாதன்;

நேற்று முன்தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநா ளையொட்டி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தந்தை பெரியார் நினைவிடங்களுக்கும், கோபாலபுரம் இல்லம் மற்றும் சிஐடி காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் நேரில் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் காலை 9.15 மணி முதல் முக்கியப் பிரமுகர்கள், கூட்ட ணிக் கட்சித் தலைவர்கள், தொண் டர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர்களிட மிருந்து சுமார் 4 மணி நேரம் நேரம் நின்றவாறே முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்தினை பெற்றார்.

முதலமைச்சர் அவர்கள் தனக்குப் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

---

# 'தி வீக்' ஆங்கில வார இதழ் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

முதல் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து நீங்கள் எங்களின் திட்டங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு இருப்பீர்கள். அரசுப் பள்ளி மாணவர்களை உலக அளவில் முன் னணி உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பும் மாடல் ஸ்கூல்ஸ், விமான நிலையத்திற்கு இணை யான பேருந்து நிலையங்கள், உயர்சிறப்பு மருத் துவமனைகள், சிறு விளையாட்டரங்கங்கள், ஏழைகளுக்கு தரமான குடியிருப்புகள் இப்படி ஒவ்வொரு 'செக்டாரிலும்' நாங்கள் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள எல்லா வட்டாரத்திலும் புதிய தொழில் முதலீடுகள் மூலமாக முன்னணி நிறுவ னங்களின் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து வழங்கிக் கொண் டிருக்கிறோம்.

தமிழ்நாடு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு வீட்டுமனை பட்டாக்களை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

### ஐ.நா.அமைப்பு எங்களுக்கு பாராட்டு!

மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப் போம் - நம்மைக் காக்கும் 48, நலம் காக்கும் ஸ்டாலின், இலவச கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி என்று எங்களின் திட்டங்களை இங்கு இருக்கும் மருத்துவர்கள் தொடங்கி, ஐ.நா. அமைப்பு வரை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக 75 இலட் சம் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு 3 கோடி மக் கள் பயன்பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவ தும் பெரிய பெரிய மேம்பாலங்கள், பல்வேறு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் போடப்பட்டிருக்கிறது. கிராமச் சாலைகளையும் மேம்படுத்தி இருக்கிறோம். பெருநகரங்களுக்கு நடுவே அழகிய பூங்காக்களை அமைக்கிறோம். அறிவுக் கோயில்களாக பிரமாண்ட நூலகங்கள் கட்டப்படுகின்றன!

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் டைடல் பார்க் இருக்க வேண்டும் என்ற நோக்கத் துடன், இரண்டாம் நிலை மாநகரங்களில் கூட 'நியோ டைடல் பார்க்', 'எல்காட்' போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு அடுத்து ஒரு பெரிய 'ஃபின்-டெக்' சிட்டியை திறந்து வைக்க போகிறேன். அடுத்து, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய வீடுகளை பய னாளிகளுக்கு நான் ஒப்படைக்க இருக்கிறேன்.

### உழவர்களுக்கு தனி பட்ஜெட் – விளைச்சலில் சாதனை!

வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண் டால் உழவர்களுக்குத் தனி பட்ஜெட் போட்டு, விளைச்சலில் சாதனை படைத்திருக்கிறோம்.

காலநிலை மாற்றத்தை மனதில் வைத்து Advance-ஆக செயல்படுவதிலும் தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னோடியாக இருக்கிறது. துறை யின் பெயர் மாற்றம் தொடங்கி, காலநிலை மாற்ற இயக்கம், நிர்வாக குழு, காலநிலை மாற்ற உச்சி மாநாடுகள் என கவனம் செலுத்திக் கொண்டிருக் கிறோம். மாசில்லாத போக்குவரத்திற்காக மாநி லம் முழுவதும் E-Bus பயன்பாட்டை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம்.

எங்கள் மேல் பொய் பரப்புபவர்களுக்கு பதிலடி கொடுப்பது மாதிரி, இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில் களில் குடமுழுக்கு நடத்தியிருக்கிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேல், இந்த ஆட் சியே மகளிர் மற்றும் மாணவர்களுக்கான ஆட்சி என்று சொல்லும் அளவிற்கு 'திராவிட மாடல்' அர சின் முத்திரைத் திட்டங்கள் எல்லாமே அவர்களுக் காகதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதில் சிலவற்றை மட்டும் நான் உங்களுக்கு நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், கல்லூரி மாணவர்களுக்கு லேப் டாப், காலை உணவுத் திட்டம், தோழி விடுதிகள் என நிறைய இருக்கிறது. என்னால் உறுதியாக சொல்ல முடியும், இத்தனை முத்திரைத் திட்டங் களை வெற்றிகரமாக செயல்படுத்தும் வேறு மாநில அரசு இந்தியாவிலேயே நிச்சயமாக இருக்க முடியாது. சிறிய குளறுபடி, குழப்பம் கூட இல்லா மல், தேவையானவர்களுக்கு கிடைப்பது மாதிரி சரியாக செயல்படுத்தி வருகிறோம்.

### இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு!

இதையெல்லாம் யாரும் மறைக்கவோ மறுக் கவோ முடியாது. எல்லாமே Concrete Development! அதனால்தான் கண்கூடாக பார்க்கலாம் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். அடுத்து நம் பர்ஸ்-க்கு வருகிறேன்.

நாங்கள் இப்படி All Rounder-ஆக அடித்து ஆடு வதால்தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலம் தமிழ்நாடு என்று ஒன்றிய பா.ஜ.க. அரசே பாராட்டி சொல்லி யிருக்கிறது. நம்பர் ஒன் மாநிலம் மட்டுமல்ல; இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய 'One and Only' மாநிலமும் நம்முடைய தமிழ்நாடுதான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல; Human Development Index-லும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என் பதுதான் எங்களின் பெருமைக்குரிய தனித்தன் மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது!

### நெருக்கடியை மீறி சாதித்திருக்கிறோம்!

இந்தியா முழுவதும் பா.ஜ.க. ஆளும் மாநிலங் களில், அதாவது டபுள் எஞ்சின் என்று அவர்கள் சொல்லும் டப்பா எஞ்சின் ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா? முடி யவே முடியாது! அவர்கள் செய்வதெல்லாம் வன் முறை, வெறுப்பு பேச்சு, பிற்போக்குவாதம். இதற்கு அப்படியே நேர்மாறான, முற்போக்கு அரசு எங்கள் 'திராவிட மாடல்' அரசு.

முக்கியமாக நீங்கள் குறித்துக்கொள்ள வேண் டியது, நாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் ஒன்றிய அரசின் உதவி இல்லாமலேயே சாதித்தி ருக்கிறோம். இன்னும் சொல்ல போனால் அவர் களின் நெருக்கடிகளை மீறி சாதித்திருக்கிறோம்.

2021-ஆம் ஆண்டிலேயே பத்தாண்டுகளுக் கான Vision-னோடுதான் நான் வந்தேன். ஸ்டாலி னின் ஏழு உறுதிமொழிகள் என்று 2031 வரைக் குமான தொலைநோக்கு குறிக்கோள்களை சொல்லிவிட்டுத்தான் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றேன். நான் நினைத்ததை விட, அதிக வேகத்தில் அதைநோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில் வெளியான மாநில பொருளாதார ஆய்வறிக்கையும் அதைத் தான் சொல்கிறது.

"தமிழ்நாடு இதே வளர்ச்சியை தக்க வைத் துக்கொண்டால், ஒரு டிரில்லியன் டாலர் பொருளா தாரம் என்ற இலக்கை அடையும்" என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். அதனால், என்னுடைய Vision-யை Reality-ஆக மாற்றுவதற்கு, அடுத்த 5 ஆண்டுகளும், இதே 'Mission Mode'-இல் நாங் கள் உழைப்போம்.

என்னை பொறுத்தவரை, மக்களின் தேவை யறிந்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேன். மக்கள் சொல்லும் குறைகளை மட்டுமல்ல; எதிர்க் கட்சிகள் சொல்லும் குறைகளையும் காது கொடுத்து கேட்டு அதை சரி செய்கிறேன்.

நேற்று மதுரை வந்த பிரதமர் மோடி அவர் கள், மதுரவாயல் - துறைமுகம் மேம்பாலப் பணி கள் தாமதம் பற்றி குற்றம் சாட்டி அதை குறிப்பிட்டு பேசியிருக்கிறார். அவர் கூட்டணி வைத்திருக்கும் அ.தி.மு.க.தான் இந்த திட்டம் வரக்கூடாது என்று தடை செய்தார்கள். வழக்கிலும் வாதாடினார்கள். இந்த பணிகள் நாங்கள் வந்து, இந்த ஒன்றிய அர சிடம் சொல்லி இப்போதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

### தேர்தல் நேரத்தில் பொய் அவிழ்ப்பு!

தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி! என்பது தமிழ்நாட்டு மக் களுக்கு நன்றாகத் தெரி யும். இருந்தாலும், பிரத மர் மோடி அவர்களுக்கு சொல்ல சாதனைகள் இல்லாததால், தேர்தல் நேரத்தில் பொய்யை அவிழ்த்து விட்டிருக் கிறார்.

இதைவிட பெரிய காமெடியும் நேற்று மேடையில் அவர்கள் பேசும்போது நடந்தது. என்னவென்றால், பழ னிசாமி அவர்கள் 'அ. தி.மு.க. ஆட்சி அமைக் கும்' என்று சொல்கிறார். அவரை மேடையில் வைத்துக்கொண்டே, பிரதமர் மோடி அவர்கள் 'NDA ஆட்சி' அமையும் என்று சொல்கிறார். யாருக்கு யார் தலைமை என்றே தெரியாமல்தான் இவர்கள் கூட்டணி இருக்கிறது.

இதை நான் சொன்னபோது சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், பிரதமர் மோடி அவர் களும் உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர் களும் ஒவ்வொருமுறை தமிழ்நாட்டிற்கு வரும் போதும் நான் சொன்னதை உறுதிப்படுத்தி செல்கிறார்கள்.

தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்ற இந்த தேர்தலில் நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்! அந்த திராவிட மாடல் 2.0-வில் எங்கள் Record-யை நாங்களே Beat செய்வோம்!

> ❖ **ஒன்றிய அரசின் நெருக்கடிகளை மீறி சாதனைகளைச் சாதித்திருக்கிறோம்.**
>
> ❖ **தி.மு.க. ஆட்சி என்றால் வளர்ச்சி! வளர்ச்சி என்றால் தி.மு.க. ஆட்சி!**
>
> ❖ **தேர்தல் நேரத்தில் பொய் மூட்டைகளை அள்ளி வீசுகிறார் பிரதமர் மோடி!**
>
> ❖ **யாருக்கு யார் தலைமை என்று கூட தெரியாத ஒரு கூட்டணி!**
>
> ❖ **மதுரவாயல் – துறைமுகம் மேம்பாலப் பணிகளுக்குத் தடை போட்ட அ.தி.மு.க.**

அதனால்தான், நான் என்னுடைய பிரசா ரத்தை தொடங்கியபோதே இந்த தேர்தல் 'Tamil Nadu Vs NDA' என்று தெளிவாகச் சொன்னேன்.

**தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? நிச்சயம் தமிழ்நாடு வெல்லும்!**

இந்த இனிய நிகழ்ச்சியில் என்னுடைய கருத் துகளை பகிர்ந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருக்கும் 'தி வீக்' குழுமத்திற்கு நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வருகை!


# திருப்பத்தூர் மாவட்டக் கழகத்தினருக்கு வேண்டுகோள்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருப்பத்தூர், மார்ச் 3-*

திருப்பத்தூர் மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்து மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகம் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப் புக் குழு கருத்து கேட்பு கூட்டமானது கழக துணைப் பொதுச்செயலா ளர் கனிமொழிகருணாநிதி MP அவர்கள் தலைமையில்



இன்று 3.3.2026 செவ் வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் JPM மஹால், வேலூர் மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் எதிரில் நடைபெற உள்ளது.

திராவிட மாடல் 2.0 ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், திருப்பத்தூர் மாவட்டத்தின் வளர்ச்சிக் கும் தங்களின் மேலான கருத்துக்களை நேரில் கலந்துகொண்டு தெரி விக்குமாறு

நாடாளுமன்ற உறுப்பி னர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், அனைத்து சார்பு அணி களின் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் அணி களின் நிர்வாகிகள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூ ராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், அனைத்து சங்கங்களின் நிர்வாகிகள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.